positive partnerships

Working together to support school-aged students on the autism spectrum

# ஆட்டிசம் : கட்டுக்கதைகளும் உண்மைகளும்

Tamil - Myths & Facts



**‘கட்டுக்கதைகள்’ என்பன குடும்ப அங்கத்தவர்களிடமிருந்து பெற்ற நேரடிக் கூற்றுக்களாகும்.**

**‘உண்மைகள்’ விஞ்ஞான மற்றும் மருத்துவ ஆய்வை அடிப்படையாகக் கொண்டவை.**



| கட்டுக்கதை | உண்மை |
|---|---|
| ‘ஆட்டிசம்’ என்பது ஒரு சாபக் கேடு அல்லது தண்டனை | ‘ஆட்டிசம்’ சாபமொன்றின் மூலம் ஏற்படுவதில்லை. ‘ஆட்டிசம்’ என்பது இளம் வயதினர் ஒருவரின் மூளையில் உள்ள வேறுபட்ட தன்மையாகும். ‘ஆட்டிசம்’ உள்ளவர்களுக்கு ஆதரவும் உதவியும் கிடைக்கும் போது அவர்களால் வளர்ச்சியும் முன்னேற்றமும் அடையலாம். |
| தடுப்பூசிகளால் ‘ஆட்டிசம்’ ஏற்படுகிறது | ‘ஆட்டிச’த்திற்கும் தடுப்பூசிகளுக்கும் இடையே எந்தத் தொடர்பும் இல்லை என்பதனை ஆய்வுகள் கண்டறிந்துள்ளன. அவ்வாறு தொடர்பு இருப்பதாக வாதிடும் கட்டுரைகள் தவறானவை என்று நிரூபிக்கப்பட்டுள்ளன. |
| ‘ஆட்டிசம்’ என்பது தாய் அல்லது தந்தையின் தவறினால் ஏற்படுவது | மரபணுக்கள் மற்றும் சுற்றுச்சூழல் உள்ளிட்ட பல காரணிகளால் மக்களில் ‘ஆட்டிசம்’ ஏற்படலாம். பெற்றோர்கள் செய்த ஏதாவது தவறினால் அது ஏற்படுவதில்லை. |
| ‘ஆட்டிசம்’ ஒரு தொற்றுநோய் | ‘ஆட்டிசம்’ ஒரு தொற்றுநோய் அல்ல. எனினும் ‘ஆட்டிசம்’ இருப்பதாகக் கண்டறியப்பட்டவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. பெற்றோர்களும் மருத்துவர்களும் ‘ஆட்டிசம்’ பற்றி அதிக விழிப்புணர்வு பெற்றுள்ளனர், அத்துடன் ‘ஆட்டிச’த்திற்கான மதிப்பீடுகளை மேற்கொள்வதில் அதிகம் ஈடுபடுகின்றனர். |
| ‘ஆட்டிசம்’ தொலைபேசி, கணினி போன்ற தொழில்நுட்பங்களின் அதிக பாவனையால் ஏற்படுகிறது. | தொழல்நுட்பத்திற்கும் ‘ஆட்டிச’த்திற்கும் தொடர்பு இருப்பதாக எந்த ஆதாரமும் இல்லை. தொழில்நுட்பம் தோன்றுவதற்கு முன்பே ‘ஆட்டிசம்’ உள்ளவர்கள் எமது சமூகங்களில் இருந்தனர். |

**positivepartnerships.com.au** இற்குச் செல்க.

The Positive Partnerships initiative is funded by the Australian Government Department of Education through the Helping Children with Autism Package. The views expressed in this publication do not necessarily represent the views of the Australian Government or the Australian Government Department of Education.

# ஆட்டிசம் : கட்டுக்கதைகளும் உண்மைகளும்

**‘கட்டுக்கதைகள்’ என்பன குடும்ப அங்கத்தவர்களிடமிருந்து பெற்ற நேரடிக் கூற்றுக்களாகும்.**

**‘உண்மைகள்’ விஞ்ஞான மற்றும் மருத்துவ ஆய்வை அடிப்படையாகக் கொண்டவை.**



| கட்டுக்கதை | உண்மை |
| --- | --- |
| வைட்டமின் ‘சி’ அல்லது ‘டி’ குறைபாட்டால் ‘ஆட்டிசம்’ ஏற்படுகிறது | வைட்டமின்கள் குறைபாட்டிற்கும் ‘ஆட்டிச’த்திற்கும் இடையே எந்தத் தொடர்பும் இல்லை. உங்கள் பிள்ளைக்கு அதிக வைட்டமின் ‘சி’ அல்லது ‘டி’ தேவை என்று நீங்கள் கரிசனை காட்டினால், உங்கள் மருத்துவரிடம் பேசுங்கள். |
| ‘ஆட்டிசம்’ உள்ளவர்கள் நண்பர்களை விரும்ப மாட்டார்கள் | ‘ஆட்டிசம்’ உள்ளவர்களுக்கு நட்புகள் இருக்கலாம். அவை ‘ஆட்டிசம்’ இல்லாதவர்களுக்கு உள்ள நட்புகளை விட்டும் வித்தியாசமானவையாகத் தோன்றலாம். அவர்களுக்கு நட்புறவுத் திறன்களை வளர்ப்பதற்கான ஆதரவுதவி தேவைப்படலாம். |
| ‘ஆட்டிசம்’ உள்ளவர்கள் மிகக் குறைந்தளவு அறிவாற்றல் (IQ) கொண்டவர்கள். | ‘ஆட்டிசம்’ உள்ளவர்களது அறிவாற்றல் திறன் அவர்களது ஏனைய திறன்களைப் போன்றே பல்வேறு வகைப்படும். ‘ஆட்டிசம்’ இல்லாதவர்களுக்கும் இவ்வாறுதான் அமைகிறது. |
| ‘ஆட்டிசம்’ உள்ளவர்கள் அனைவரும் வித்தியாசமான ஆற்றல்களைக் கொண்டவர்கள் | ‘ஆட்டிசம்’ உள்ளவர்கள், ‘ஆட்டிசம்’ இல்லாதவர்கள் உட்பட அனைவரிடமும் அவர்களுக்கே உரித்தான வலுக்களும் ஆதரவுதவித் தேவைகளும் காணப்படுகின்றன. |
| ‘ஆட்டிசம்’ ஒரு குறிப்பிட்ட வகை மக்களை மாத்திரமே பாதிக்கின்றது | சமூகத்தில் எல்லாப் பிரிவுகளையும் சேர்ந்த மக்களிடமும் எல்லாக் கலாச்சாரங்கள், சமுதாயங்கள் நெடுகிலும் ‘ஆட்டிசம்’ இருப்பது கண்டறியப்பட்டுள்ளது. |

positive partnerships

Working together to support school-aged students on the autism spectrum



# Autism: Myths and Facts

**The 'Myths' are direct quotes from family members.**

**The 'Facts' are based on science and medical research.**



| Myth | Fact |
| --- | --- |
| Autism is a curse or punishment | Autism is not caused by a curse. Autism is a difference in a young person's brain. People who are autistic can progress and develop with support and help. |
| Autism is caused by vaccinations | Research studies have found no link between autism and vaccinations. Articles claiming there is a link have been proven wrong. |
| Autism is the fault of the mother or father | People are autistic due to multiple factors including genes and the environment, not because a parent has done something wrong. |
| Autism is an epidemic | Autism is not an epidemic, however the number of people being diagnosed with autism is increasing. Parents and doctors are more aware of autism and have more access to assessments for autism. |
| Autism is caused by too much technology such as phones and computers | There is no evidence that there is a link between technology and autism. Autistic people were part of our communities before technology existed. |

Go to **positivepartnerships.com.au**

The Positive Partnerships initiative is funded by the Australian Government Department of Education through the Helping Children with Autism Package. The views expressed in this publication do not necessarily represent the views of the Australian Government or the Australian Government Department of Education.

# Autism: Myths and Facts

**The 'Myths' are direct quotes from family members.**

**The 'Facts' are based on science and medical research.**

| Myth | Fact |
| --- | --- |
| Autism is caused by a lack of Vitamin C or D | There is no link between a lack of vitamins and autism. If you are worried your child needs more vitamin c or d, talk to your doctor. |
| Autistic people don't want friends | Autistic people may have friendships that look different to people who are not autistic. They may need support to develop friendship skills |
| Autistic people all have very low intelligence (IQ) | The intellectual ability of autistic people varies as does their other abilities. This is the same for people who are not autistic. |
| All autistic people have special skills | Everyone has strengths and support needs, including autistic people and those who are not autistic. |
| Autism affects only a certain 'class' of people | Autism is diagnosed in people from all parts of society and across all cultures and communities. |

